சுருக்கம்

பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை –வேளாண் புள்ளி இயல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படும் மத்திய அரசு திட்டமான பழம் மற்றும் காய்கறி பயிர் மதிப்பீட்டாய்வு திட்டத்தினை மாநில அரசின் திட்டமாக்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ2(ம)ம) துறை

**அரசாணை (நிலை) எண்.45**

நாள்:14.05.2015
மன்மத– சித்திரை 31
திருவள்ளுவராண்டு 2046

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (வாலாயம்) எண்.148, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ2(ம)ம) துறை, நாள்:21.06.2013.
2. முதன்மைச் செயலர்/ ஆணையர், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, கடித எண்.1382/பமேதி/2014, நாள்:29.01.2014, 04.03.2014 மற்றும் 27.11.2014.
3. மத்திய அரசு கடித எண்.F.No.8-1/2014-ASI-ES, நாள்.09.01.2014

*****

**ஆணை:**

வேளாண் புள்ளி இயல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படும் பயிர்களின் பரப்பு, உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம், ஆகியவற்றை 01.03.2013 முதல் 31.02.2014 வரையிலும், பழம் மற்றும் காய்கறி பயிர் மதிப்பீட்டாய்வுத் திட்டத்தினை 01.04.2013 முதல் 31.03.2014 வரையிலும், 100% முழு நிதியுதவியுடன் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. வேளாண் புள்ளிஇயல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படும் பயிர்களின் பரப்பு உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம் மற்றும் பயிர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களுக்கு மட்டும் 2014–2015 ஆம் ஆண்டிற்கு தொடர்ந்து செயல்பட மத்திய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் 2014–2015 ஆம் ஆண்டிற்கான பழம் மற்றும் காய்கறி மதிப்பீட்டாய்வுத் திட்டம் மத்திய அரசின் நிர்வாக ஒப்புதலில் இருந்து நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இத்திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, 2014–2015 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தை மாநில அரசின் திட்டமாக செயல்பட செய்யுமாறு, முதன்மைச் செயலர்/ ஆணையர், பொருள்இயல் மற்றும் புள்ளி இயல் துறை அவர்கள் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. அரசு தீவிர பரிசீலணைக்குப்பின், வேளாண் புள்ளிஇயல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் திட்டமாக செயல்பட்ட பழம் மற்றும் காய்கறி மதிப்பீடு திட்டத்தினை பணி நீட்டிப்பில்லாமல் மாநில அரசின் திட்டமாக ஏற்றுக்கொள்ள ஒப்புதல் வழங்கப்படுகின்றது. இந்நிலையில் இத்திட்டத்திற்கான செலவினத்தை மேற்கொள்ளும் வகையில் ரூ.3,18,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்) ஐ ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3 ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத் தொகையினை கீழ்க்காணும் இனங்களுக்கு கோரிக்கை எண்.36–02 ன் கீழ் துவக்கப்பட்டுள்ள புதிய கணக்குத்தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"3454 – மக்கள் தொகை கணக்கெடுப்பும், ஆய்வு மற்றும் புள்ளி விவரமும் – 02 ஆய்வும், புள்ளிவிவரமும் –110 விவரச்சுவடியும், புள்ளி விவரக் குறிப்பேடுகளும் – II மாநிலத் திட்டம் – (JX) பழவகைககள், காய்கறிகள், சிறு வகை பயிர்கள் ஆகியவை குறித்த மதிப்பீட்டு ஆய்வு–

| வ.எண். | இனம் | செலவுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 04 பயணச் செலவுகள் 01 சுற்றுப் பயணப்படிகள் (த.தொ.கு.3454–02–110–JX–0417) | 2,88,000/– |
| 2. | 72 பயிற்சி (த.தொ.கு.3454–02–110–JX–7205) | 20,000/– |
| 3. | 05 அலுவலகச் செலவுகள் 02 ஏனைய சில்லரைச் செலவுகள் (த.தொ.கு.3454–02–110–JX–0524) | 10000/– |
| மொத்தம் | | 3,18,000/– |

5. முதன்மைச் செயலர்/ ஆணையர், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

6. சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்/ கருவூலக் கணக்கு அலுவலர் மேற்கண்ட புதிய கணக்கு தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி–3 ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான கூடுதல் நிதியொதுக்கம் 2015–2016 ம் ஆண்டின் திருத்த/இறுதி திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும் 2015–2016 ஆம் ஆண்டின் திருத்த/ இறுதி திருத்த மதிப்பீட்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி, முதன்மைச் செயலர், ஆணையர் பொருளியல் மற்றும் புள்ளிஇயல் துறை, சென்னை மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறார். மேலும், 2015–2016ம் ஆண்டிற்கான திருத்த / இறுதி திருத்த மதிப்பீட்டிற்கான முன்மொழிவினை நிதித் (பொது/ வ/செ.II) துறைக்கு அனுப்பும் போது இச்செலவினத்தை தவறாமல் சேர்க்குமாறு முதன்மைச் செயலர்/ ஆணையர், பொருளியல் மற்றும் புள்ளிஇயல் துறை, சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இந்த ஆணை நிதித் (பொது) துறையின் அ.சா.கு எண்.24790/பொது/2015, நாள்.11.05.2015, ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.255 (இருநூற்று ஐம்பத்தைந்து மட்டும்)

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.கிருஷ்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர்,
பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, சென்னை–600 006.
மாநில முதன்மைக் கணக்கு அலுவலர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
நகல்
நிதி (பொது/வ.செ.பொ.II)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

18.05.15
பிரிவு அலுவலர்
18/5/15